


மயிலாடுதுறை மாவட்டம் பொறையாரில் இருந்து மயிலாடுதுறைக்கு மகளிர் விடியல் பயண பேருந்து தொடங்கி வைக்கும் நிகழ்ச்சியில்பொறையார் பேருந்து நிலையத்திலிருந்து பேருந்தை மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் கொடி அசைத்து தொடங்கி வைத்தார். உடன் செம்பனார்கோயில் தெற்கு ஒன்றியச் செயலாளர் எம். அப்துல் மாலிக், தரங்கம்பாடி பேரூர் செயலாளர் எஸ்.கே. முத்துராஜா, தரங்கம்பாடி பேரூராட்சி தலைவர் சுகுணா சங்கரி குமரவேல், துணைத்தலைவர் ராஜேந்திரன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### தி.மு.க. சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு மாநில துணைச் செயலாளர் துபாய் கே.அன்வர் அலி தலைமையில்

# திருச்சியில் ரமலானை முன்னிட்டு நல உதவிகள்! அமைச்சர் கே.என்.நேரு வழங்குகிறார்!

## கே.என்.அருண்நேரு எம்.பி. பங்கேற்பு! டாக்டர் அ.சுபேர்கான் முன்னிலை!

திருச்சி, மார்ச் 27 - ரமலான் திருநாளை முன்னிட்டு தி.மு.க. சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு சார்பில் நல உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

29.3.2025 அன்று காலை 10.00 மணியளவில் திருச்சி மத்திய பேருந்து நிலையம் அருகில் உள்ள எல்.கே.எஸ். மஹாலில் நடைபெறும் இந்நிகழ்வுக்கு, தி.மு.க. சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு மாநில துணைச் செயலாளர் துபாய் கே.அன்வர் அலி தலைமை வகிக்கிறார்.

சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு மாநிலச் செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் முன்னிலை வகிக்கிறார்.

இந்நிகழ்வில் - கழக முதன்மைச் செயலாளரும் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சருமான கே.என். நேரு அவர்கள் கலந்து கொண்டு, நல உதவிகள் வழங்குகிறார்.

கே.என்.அருண்நேரு எம்.பி., இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்கிறார்.

மேலும் இந்நிகழ்ச்சியில் - திருச்சி மத்திய மாவட்டச் செயலாளர் க.வைரமணி, திருச்சி மாநகராட்சி மேயர் மு.அன்பழகன், மூத்த வழக்கறிஞர் ஆர். பாஸ்கரன், பகுதிச் செயலாளர் மோகன்தாஸ், கோட்டத் தலைவர் துர்கா தேவி, மாமன்ற உறுப்பினர் புஷ்பராஜ், வட்டச் செயலாளர் மூவேந்திரன், மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு அமைப்பாளர் எல்.மார்ட்டின் குழந்தைராஜ் உள்ளிட்ட பலரும் கலந்து கொள்கின்றனர்.

சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு மாநகர அமைப்பாளர் அக்பர் அலி நன்றி கூறுகிறார்.

### கீழ்பெண்ணாத்தூர் தொகுதி

# வேட்டவலத்தில் புறவழிச்சாலை அமைக்கும் பணி!

## சட்டப் பேரவையில் – அமைச்சர் எ.வ.வேலு விளக்கம்!



சென்னை, மார்ச் 27 - சட்டப் பேரவையில் கேள்வி நேரத்தின் போது, சட்டப் பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, தமது கீழ்பெண்ணாத்தூர் தொகுதி - வேட்டவலத்தில் புறவழிச்சாலை அமைக்கும் பணி குறித்து எழுப்பிய கேள்விக்கு, பொதுப் பணி மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் எ.வ.வேலு விரிவான விளக்கம் அளித்தார்.

கேள்வி நேரத்தின் போது இதுகுறித்து நடைபெற்ற விவாதம் வருமாறு:

**பேரவைத் துணைத் தலைவர் கு. பிச்சாண்டி:** என்னுடைய கீழ்பெ ண்ணாத்தூர் தொகுதியிலே வேட்டவலத்திற்கு புறவழிச் சாலை அறிவிக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பணிகள் எப்போது தொடங் கும்? திருவண்ணாமலையிலே தெலுங்கானா, ஆந்திராவிலிருந்து அதிக பக்தர்கள் வருவதால் அதிகளவு கூட்டம் இருக்கின்ற காரணத்தால் Collectorate-லிருந்து செங்கம் ரோடு இணைக்கின்ற அந்த bypass சாலை இந்த ஆண்டே போடப்படுமா என்பதையும் நான் அறிய விரும்புகி றேன். இன்றைக்கு ஒன்றிய அரசு நெடுஞ்சாலைத் துறையி ன் மூலம் போடப்படுகின்ற எல்லா இடங்களிலும் precast-ஐப் பயன்படுத்துவோம் என்று அறிவித்திருக்கிறார்கள். அதுபோன்று, நம்முடைய நெடுஞ்சாலைத் துறையும் பணிகள் விரைவாக நடைபெறுவதற்கு precast முறையில் culvert-கள் மற்றும் பாலங்கள் அமைப்பதற்கான நடவடிக்கையை அரசு எடுக்குமா என்பதைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, சென்னையிலே எப்படி வெளிவட்டச் சாலை அமைக்கப்பட்டிருக்கிறதோ அது போல மதுரை, திருச்சி மற்றும் சேலம் போன்றவைகளுக்கெல்லாம் வெளிவட்டச் சாலைகளை இப்போதே அதற்கான முயற்சிகளை எடுத்தால் அது நல்ல முறையில் இருக்கும் என்பதைத் தெரிவித்து, அதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா?

**அமைச்சர் எ.வ. வேலு:** முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றவுடனேயே, தமிழ்நாட்டிலே சாலைகளுக்கு முக்கியத்து வம் தந்து பல்வேறு நகரப் பகுதியிலே புறவழிச் சாலைகளை நாம் அமைத்துக் கொண்டிருக்கிறோம் என்பதை இங்கேயிருக்கிற 234 சட்டமன்ற உறுப்பினர்களும் அறிவார்கள். அந்த வகையிலே, திருவண்ணாமலை ஆன்மிகத் திருத்தலமாக இருக்கின்ற காரணத்தால், கர்நாடக மாநிலம், ஆந்திர மாநிலம் போன்ற பல மாநிலங்களிலிருந்து ஆன்மிகப் பெருமக்கள் தங்களுடைய ஆன்மிகக் கடமையை ஆற்றுவதற்காக ஒரு நாளைக்கு 25,000, 30,000 என்று இருந்தது இன்றைக்கு இலட்சக்கணக்கான மக்கள் வருவதைப் பார்க்க முடிகிறது. அதை உணர்த்துகின்ற வகையில்தான் நம்முடைய பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் இந்தக் கேள்வியை இங்கு எழுப்பியிருக்கிறார்கள்.

அவருடைய தொகுதியில் இருக்கிற வேட்டவலத்தைப் பொறுத்தளவிற்கு அது தேசிய நெடுஞ்சாலை. இந்த தேசிய நெடுஞ்சாலைக்கு ஒரு முறைக்கு பல முறை நிதின் கட்கரி அவர்களுக்கு அழுத்தம் கொடுத்ததன் அடிப்படையில் இந்த புறவழிச் சாலைக்கு நிதி ஒதுக்கப்பட்டு நில எடுப்புப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அந்த நில எடுப்புப் பணிகள் முடிந்தவுடனே சாலை அமைக்கப்படும்.

**மற்றொன்று;** இந்த ரவுண்டானா சாலையைப்பற்றிச் சொன்னார்கள். திருவண்ணாமலையைப் பொறுத்தளவிற்கு முக்கால் பகுதி ரவுண்டானா சாலை அமைக்கப்பட்டுவிட்டது. ஒன்று; வேலூரிலிருந்து செங்கம் சாலையை இணைத்துவிட்டோமென்று சொன்னால் ரவுண்டானா சாலை அமைந்துவிடும். அதற்காக மாநில அரசின் சார்பாக நில எடுப்புக்கென்று நிதி ஒதுக்கப்பட்டது. ஆக, ஒன்றிய அரசாங்கம் இரண்டு ஒன்றிய சாலைகளாக அதாவது தேசிய நெடுஞ்சாலை வேலூரும் தேசிய நெடுஞ்சாலை; செங்கமும் தேசிய நெடுஞ்சாலையாக இருக்கின்ற காரணத்தினால் மாநில நெடுஞ்சாலையிலே பணம் கொடுக்க வேண்டிய அவசியமில்லையென்று அவர்களே எனக்குக் கடிதம் எழுதினார்கள். அந்த அடிப்படையிலே ஒன்றிய அரசாங்கத்தினுடைய நிதியைப்பெற்று, இப்போது நிலமெடுப்புப் பணியிலே மாவட்ட வருவாய் அலுவலருக்கு ஆணை வந்திருக்கிறது.

இன்னும் இரண்டொரு மாதங்களிலே நிலமெ டுப்புப் பணிகள் முடிந்தவுடனேயே இந்த நிதி யாண்டிலேயே அந்த மீதமிருக்கிற ரவுண்டானா சாலையை அமைப்பதற்கு அரசு அதற்கு வேண்டிய அனைத்து முயற்சியும் எடுக்கும்.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.




கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம் கிருஷ்ணகிரியில் மேற்கு, கிழக்கு நகர திமுக சார்பில் பொறுப்பாளர் அஸ்லம் தலைமையில் நடைபெற்ற அனைத்து சமுதாய மக்களும் கலந்து கொண்ட இப்தார் நிகழ்ச்சி (நோன்பு திறக்கும் நிகழ்ச்சி) நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளர்களாக கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ. கிருஷ்ணகிரி நாடாளுமன்ற உறுப்பினர் கோபிநாத் எம்.பி. கலந்து கொண்டு சிறப்பித்தனர். இந்தியா கூட்டணி கட்சியின் நிர்வாகிகள் ஆயிரத்துக்கும் மேற்பட்ட இஸ்லாமிய சகோதரர்களும் கழக தோழர்களும் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.



புதுக்கோட்டை வடக்கு மாவட்ட தலைமைச் செயற்குழு உறுப்பினர் கீரை.தமிழ் ராஜா தந்தையும், முன்னாள் புதுக்கோட்டை மாவட்ட துணைச் செயலாளருமான கீரை தமிழ்ச்செல்வன் அவர்களின் 28 வது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அவரது நினைவிடத்தில் புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கேகே.செல்ல பாண்டியன், கவிச்சுடர் கவிதைப் பித்தன், டாக்டர் முத்துராஜா எம்.எல்.ஏ., த. சந்திரசேகர் , பி.ராஜேஸ்வரி, வெ.முத்துகிருஷ்ணன், மா.தமிழ் அய்யா, ஆர்.ஆர். எஸ்.மாரிமுத்து, சு. சண்முகம், வே.ராஜேஷ் மற்றும் மாவட்ட ஒன்றிய பொறுப்பாளர்கள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டு நினைவஞ்சலி செலுத்தினர்.



நாமக்கல் கிழக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் இந்தித் திணிப்பு நிதிப் பகிர்வில் பாரபட்சம் தொகுதி மறு சீரமைப்பில் அநீதி இழைக்கும் ஒன்றிய அரசைக் கண்டித்து நாமக்கல் காந்தி சிலை உழவர் சந்தை அருகில் நடைபெற்ற கண்டன பொதுக்கூட்டத்தில் நாமக்கல் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும் நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என். இராஜேஷ்குமார், கழக மாணவர் அணி செயலாளர் தலைமைக் கழகப் பேச்சாளருமான வழக்கறிஞர் இரா.ராஜீவ் காந்தி, தலைமை கழக இளம் பேச்சாளர் தஞ்சை. ஜோ.வியானி விஷ்வா ஆகியோர் சிறப்புரையாற்றினர். இக்கூட்டத்தில் பெ.ராமலிங்கம் எம்.எல்.ஏ., ராணா ஆனந்த் செ.பூபதி அ.சிவக்குமார், மாநகராட்சி மேயர் து.கலாநிதி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### தஞ்சை பிரகதீஸ்வரர் கோவிலில் ராஜராஜ சோழனுக்கு சிலை:

# மன்னர்களின் புகழை போற்றிப் பாராட்டுகிற அரசு திராவிட மாடல் அரசு!

## சட்டப் பேரவையில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!



சென்னை, மார்ச் 27 – தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நேற்று முன்தினம் (25.3.2025) வினா விடை நேரத்தின்போது, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் திரு. பி.கே.சேகர்பாபு அவர்கள், குளித்தலை சட்டமன்ற உறுப்பினர் ஆர்.மாணிக்கம், மேலூர் சட்டமன்ற உறுப்பினர் பெரியபுள்ளான் (எ) பி.செல்வம், வந்தவாசி சட்டமன்ற உறுப்பினர் எஸ். அம்பேத்குமார், ஒரத்தநாடு சட்டமன்ற உறுப்பினர் திரு.ஆர்.வைத்தியலிங்கம், வேலூர் சட்டமன்ற உறுப்பினர் பி.கார்த்திகேயன் ஆகியோர் எழுப்பிய வினாக்களுக்கு பதிலளித்தார்.

**சட்டமன்ற உறுப்பினர் ஆர். மாணிக்கம்:** குளித்தலை தொகுதி, குளித்தலை நகரத்தில் உள்ள அருள்மிகு கடம்பவனேஸ்வரர் திருக்கோயிலுக்கு சொந்தமான பழுதடைந்துள்ள திருமண மண்டபத்திற்கு புதிதாக கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு:** அருள்மிகு கடம்பனேஸ்வரர் திருக்கோயிலுக்கு கடந்த ஆண்டு ஜுலை 12 அன்று ரூ.50 லட்சம் செலவில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு குடமுழுக்கு நடைபெற்றுள்ளது. உறுப்பினர் அவர்கள் கூறிய திருமண மண்டபமானது 64 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டது. அது 2007 ஆம் ஆண்டிலிருந்து பயன்பாட்டில் இல்லை. பழுதடைந்த திருமண மண்டபத்தை தற்போது இடித்து அகற்றி இருக்கின்றோம். திருமண மண்டபம் வேண்டும் என்ற நம்முடைய உறுப்பினரின் கோரிக்கையை ஏற்று பரிசீலித்த போது அந்த திருக்கோயிலுக்கு வைப்பு நிதியும் ரூ.40 லட்சம் தான் இருக்கின்றது. ஆணையரின் பொது நலநிதியும் தர முடியாத ஒரு சூழல் இருந்தாலும், பெரிய திருக்கோயிலிலிருந்து கடன் பெற்று அவரது கோரிக்கையை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கவனத்திற்கு கொண்டு சென்று இந்த ஆண்டிற்கான சட்டமன்ற அறிவிப்பிலே திருமண மண்டப அறிவிப்பு இடம் பெறும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஆர்.மாணிக்கம் :** குளித்தலை நகரத்தில் உள்ள அருள்மிகு கடம்பவனேஸ்வரர் திருக்கோயிலுக்கு திருமண மண்டபம் வேண்டும் என்ற என்னுடைய கோரிக்கையை ஏற்று வருங்காலத்தில் கோரிக்கை நிறைவேற்றப்படும் என்று அறிவித்து இருக்கின்ற அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொண்டு, அய்யர்மலையில் அமைந்துள்ள இரத்தினகிரீஸ்வரர் திருக்கோயில் என்பது சுமார் 1600 படிகளை கொண்ட உயரமான மலை. அந்த மலைக்கு ரோப் கார் வேண்டும் என்ற நீண்ட நாள் கோரிக்கை நமது முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் ஆட்சியில் ஆணை பிறப்பிக்கப்பட்டு அடிக்கல் நாட்டப்பட்டது. அதன் பிறகு வந்த ஆட்சியில் தான் அந்த திட்டம் கிடப்பில் போடப்பட்டு மீண்டும் 2021 ஆம் ஆண்டு திராவிட மாடல் நாயகன் முதல்வர் அவர்களின் ஆட்சியில் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் சேகர்பாபு அவர்களுடைய முயற்சியிலே மீண்டும் ரூ.3 கோடி ஒதுக்கப்பட்டு அந்த திருக்கோயிலுக்கு ரோப்கார் அமைத்து 2024 ஆம் ஆண்டு ஏழாம் மாதம் 24 ஆம் தேதி முதல்வர் அவர்களால் காணொலிக் காட்சி மூலம் திறந்து வைக்கப்பட்டு ரோப்கார் இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்து, அதற்காக முதல்வர் அவர்களுக்கும் அமைச்சர் அவர்களுக்கும் இந்த தொகுதியின் மக்களின் சார்பாக எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். கடம்பூரில் திருக்கோயிலுக்கு சொந்தமான இடம் காவிரி ஆற்றங்கரையில் ஒரு 15 ஏக்கர் நிலம் இருக்கின்றது. அது ஆண்டுதோறும் தைப்பூசம் தை மாதம் தகுணம் என்று திருமணம் நடைபெறும், அந்த திருவிழா நடைபெறும். அதில் ஒரு பொழுதுபோக்கு பூங்கா அமைப்பதற்கு நகராட்சிக்கு ஒப்பந்த அடிப்படையில் கொடுத்தால் திருக்கோயிலுக்கும் வருமானம் வரும். ஆகவே அங்கு பூங்கா அமைக்க அமைச்சர் அவர்கள் ஆவணம் செய்வாரா என கேட்டு அமைகிறேன்.

**அமைச்சர் :** திருக்கோயிலுக்கு சொந்தமான இடங்களில் பொழுது போக்கு பூங்காக்கள் அமைப்பதற்கு சட்டத்தில் இடம் இல்லை. இருந்தாலும் அவர் கூறியபடி அங்கு நந்தவனங்களோ அல்லது இளைப்பாறும் மண்டபங்களோ அமைத்து தருவதற்கு உண்டான நடவடிக்கை நிச்சயம் எடுப் போம் என்பதை உறுப்பினருக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஆர்.மாணிக்கம் :** குளித்தலை நகரத்தில் அமைந்துள்ள அருள்மிகு பால தண்டாயுதபாணி திருக்கோ யிலுக்கும், இராஜேந்திரம், ஈஸ்வரன் கோயிலுக்கும் குடமுழுக்கு எப்போது நடைபெறும் என்பதை அமைச்சர் அவர்கள் மூலம் கேட்டு அமைகிறேன்.

**அமைச்சர் :** உறுப்பினர் அவர்கள் கோரிய அருள்மிகு பால தண்டாயுதபாணி திருக்கோயிலுக்கு 30 ஆண்டுகளுக்கு முன்பு குடமுழுக்கு நடைபெற்றுள்ளது. தற்போது ரூ.1.27 கோடி மதிப்பீட்டில் 5 பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எவ்வளவு விரைவாக திருப்பணி களை முடித்து குடமுழுக்கு மேற்கொள்ள முடியுமோ, அவ்வளவு விரைவாக மேற்கொள்ளப்படும். அவர் கூறிய மற்றொரு திருக்கோயிலான ஈஸ்வரன் கோயிலிலும் திருப்பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. அதையும் விரைவாக முடித்து திருக்குடமுழுக்கு வேண்டிய அனைத்து பணிகளையும் விரைவுப்படு த்தப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**பெரியபுள்ளான் (எ) பி. செல்வம் :** மேலூர் சட்டமன்ற தொகுதி, அழகர் கோவிலில் இந்து சமய அறநிலைத்துறையின் சார்பாக இருபாலர் படிக்கும் அருள்மிகு சுந்தர ராஜா உயர்நிலைப்பள்ளி செயல்பட்டு வருகிறது. பெண்களின் பாதுகாப்பு கருதி பெண்களுக்கு மட்டும் மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தப்படுமா என்று தாங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**அமைச்சர் :** உறுப்பினர் அவர்கள் கோரிய பள்ளிக்கு ஏற்கனவே கூடுதலாக ஆறு வகுப்பறைகள் கட்டப்பட்டு வருகின்றன. அதில் மூன்று வகுப்பறைகள் பணிகள் நிறைவு ற்றுள்ளன. அவர் கோரியபடி அந்த பள்ளியின் தரத்தை உயர்த்துவதற்கு அரசுக்கு பரிந்துரை அனுப்பப்பட்டிருக்கின்றது. இந்த ஆண்டு நிச்சயம் அதற்குண்டான அனுமதி கிடைத்துவிடும் என்று நம்புகிறோம். அந்த பள்ளி மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தப்படும்போது தேவைப்படுகின்ற கட்டமைப்புகளையும் முன்கூட்டியே அனைத்து பணிகளையும் மேற்கொண்டு இருக்கின்றோம். அதில் ஒரு சிறப்பு என்னவென்றால் அந்த பள்ளியில் 105 மாணவிகள் பத்தாம் வகுப்பு படிக்கின்றனர். அந்த பள்ளியானது ஆண்டுதோறும் நூறு சதவீதம் தேர்ச்சி பெறுகின்ற பள்ளியாகும். அதோடு மட்டுமில்லாமல் 2024 25 ஆம் ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டு போட்டியில் அந்த பள்ளியைச் சார்ந்த மூன்று மாணவிகள் கிரிக்கெட், கபாடி ஆகிய போட்டிகளில் மாநிலத்திலே முதன்மையாக வந்தனர் என்பதால் அந்த பள்ளியின் மீது முதலமைச்சர் அவர்கள் தனி கவனம் செலுத்தி தேவையான அனைத்து வசதிகளையும் செய்துதர உத்தரவிட்டுள்ளார். அதன்படி இந்த ஆண்டு அறிவிப்பிலே அதற்கான அறிவிப்பு இடம் பெற்று, அப்பணிகள் இந்த ஆண்டு இறுதிக்குள் நிறைவேற்றி தருவதற்கான அனைத்து முயற்சி களும் மேற்கொள்ளப்படும் என்பதை உறுப்பினருக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

**எஸ்.அம்பேத்குமார்:** வந்தவாசி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வந்தவாசி நகரத்தின் அருகில் உள்ள வெண்குன்றம் கிராமத்தில் தவனகிரி நாதர் திருக்கோயில் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேல் பழமை வாய்ந்த திருக்கோயில். அந்த கோயிலுக்கு ஒவ்வொரு கார்த்திகை தீபத்துக்கும் சுமார் 50 ஆயிரத்துக்கு மேற்பட்ட பக்தர்கள் வந்து செல்கின்றனர். அந்த கோயிலுக்கு சொந்தமான நிலம் 41/1, 41/2 என்ற சர்வே எண்களில் வந்தவாசிகாஞ்சிபுரம் சாலையில் 4.5 ஏக்கர் நிலப்பரப்பு உள்ளது. அந்த இடத்தில் கோயிலுக்கு கல்யாண மண்டபம், ஒரு வணிக வளாகம் அமைக்க அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதை தாங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**அமைச்சர் :** உறுப்பினர் அம்பேத்குமார் அவர்கள் பலமுறை இது தொடர்பாக நம்முடைய பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களிடம் அழுத்தம் கொடுத்து கேட்டிருக்கின்றார். திருமண மண்டபங்களை பொறுத்தளவில் தொடர் செலவு தொடரா செலவு என்று இரு கூறுகளை ஆராய வேண்டி இருக்கின்றது. அதோடு மட்டுமல்லாமல் இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு 84 திருமண மண்டபங்களை புதிதாக கட்டிக் கொண்டிருக்கின்றோம். அதில் 37 முடிவுற்று இருக்கின்றது. உறுப்பினரின் கோரிக்கையை ஆய்வு செய்து சாத்திய கூறுகள் இருப்பின் பரிசீலிக்கப்படும். வழியிருக்கும் என்றால் மனமிருக்கும். ஆகவே அவர் கூறிய அந்த திருமணம் மண்டபத்தை கட்டுவதற்குண்டான ஆய்வை மீண்டும் அவரை அழைத்துச் சென்று மேற்கொள்வோம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஆர்.வைத்தியலிங்கம் :** தஞ்சை பிரகதீஸ்வரர் கோயில் என்று அழைக்கப்படுகின்ற பெரிய கோயிலை கட்டிய இராஜராஜ சோழனுக்கு 1972 –ல் அன்றைய முதலமைச்சர் சிலை வைத்தார். உள்ளே வைக்க முடியாது என்று தொல்லியல் துறை சொன்னதை வெளியிலே வைத்தார்கள். மாமன்னன் கப்பற்படையை உலகுக்கே அறிமுகப்படுத்தியவர் தெற்கு ஆசியாவையே வென்றவன், இந்திய கடற்படைக்கே இராஜராஜ சோழன் பெயர் சூட்ட ப்பட்டுள்ளது. 216 அடி உயரமுள்ள பெரிய கோயிலை கட்டிய அவருக்கு 100 அடி சிலை வைக்க வேண்டுமென அறநிலையத்துறை அமைச்சர் அவர்களை கேட்டு அமைகிறேன்.

**அமைச்சர் :** மன்னர்களின் புகழை போற்றி பாராட்டுகின்ற அரசு திராவிட மாடல் அரசு என்பதற்கு ஒப்பாக 1000 ஆண்டு சதய விழாவை எடுத்த ஆட்சி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆட்சி என்பதை தெரிவித்துக் கொண்டு, உறுப்பினர் அவர்களின் கோரிக்கைக்கான சாத்திய கூறுகள் ஆராயப்பட்டு, வாய்ப்பிருந்தால் நிச்சயம் சிலை அமைப்பதற்குண்டான நடவடிக்கையை இந்த அரசும், இந்து சமய அறநிலையத்துறையும் மேற்கொள்ளும் என்பதனை தெரிவித்துக் கொள்கிறேன்.

**பி.கார்த்திகேயன் :** தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை வணங்கி என்னுடைய வேலூர் தொகுதியில் ஆரணி ரோட்டில் அமைந்திருக்கின்ற திரௌபதி அம்மன் கோயிலுக்கு திருப்பணி செய்ய வேண்டும். 300 ஆண்டு பழமையான கோயில். ரோடு போடப்பட்டதால் எட்டு அடி ஒன்பது அடி பள்ளத்தில் போய்விட்டது திரௌபதி அம்மன் கோயில். அதற்கு ஐந்து கோடி ரூபாய் செலவில் கருங்கல் திருப்பணி செய்ய திட்டமிட்டு இருக்கிறோம். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திருப்பணிக்காக நிதி தர வேண்டும் என்று கேட்டு அமைகிறேன்.

**அமைச்சர் :** உறுப்பினர் அவர்கள் கோரிய நிதி அந்த மண்டலத்தின் இணை ஆணையர் பரிந்துரையோடு ஆணையாளருக்கு சமர்ப்பிக்கப்படுமானால் உடனடியாக அதற்குண்டான நிதியை ஒதுக்கி தரப்படும். அதோடு மட்டுமல்லாமல் இந்த லிப்டிங் முறையை இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு தான் இதுவரையில் 9 திருக்கோயில்களில் வெற்றிகரமாக முடித்து இருக்கின்றோம். நம்முடைய பெரம்பூர் சட்டமன்ற உறுப்பினர் சேகர் வைத்த கோரிக்கையை ஏற்று சூரிய ஒளி நேராக ஈஸ்வரன் மீது படுகின்ற வரலாற்று சிறப்புமிக்க திருக்கோயிலான இரவீஸ்வரர் திருக்கோயிலை லிப்டிங் முறையில் எட்டடி பள்ளத்திலிருந்து தரை மட்டத்திற்கு அந்த திருக்கோயிலை உயர்த்துகின்ற பணி நடந்து கொண்டிருக்கின்றது. அந்த வகையில் நீங்கள் கூறிய அந்த திருக்கோயிலை சம்பந்தப்பட்ட தொழில்நுட்ப வல்லுநர்களை அனுப்பி பரிசோதிக்க சொல்கிறோம். லிப்டிங் முறையை பயன்படுத்த முடியும் என்றால் செலவும் குறைவாக இருக்கும். அதற்குண்டான ஏற்பாடுகளை மேற்கொள்வோம். நீங்கள் கோரிய கோரிக்கை நிச்சயம் நிறைவேற்றி தரப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன் என்றார்.



நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க இளைஞர் அணி சார்பில் இந்தித் திணிப்பு, நிதி பகிர்வில் பாரபட்சம், தொகுதி சீரமைப்பில் அநீதி இழைக்கும் ஒன்றிய அரசைக் கண்டித்து பரமத்தி வேலூர் சட்டமன்றத் தொகுதி பாண்டமங்கலத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் நாமக்கல் மேற்கு மாவட்ட கழகப் பொறுப்பாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ்.மூர்த்தி, திராவிட இயக்க பேச்சாளர் நாஞ்சில்.சம்பத், தலைமைக் கழக இளம் பேச்சாளர் பாவை.பூர்ணிமா, மாநில இளைஞர் அணி துணை செயலாளர் பி.எஸ்.சீனிவாசன், பரமத்தி வேலூர் சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளர் எஸ்.உமாராணி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். இக்கூட்டத்தில் கே.கே.சண்முகம், பி.பி.தனராசு, ஏ.பி.ஆர்.சண்முகம், எம்.தங்கவேல் உள்ளிட்ட 1000 க்கும் மேற்பட்டோர்ர் கலந்து கொண்டனர்.